# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI

O.S. No.266 of 2022

Deposition of DW.2

Name of the Witness: திரு.முருகன்

Date : 06.03.2026

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)**

தாவா சொத்து சம்மந்தமாக எத்தனை கிரய ஒப்பந்த பத்திரங்கள் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. விசாலாட்சி நடேசனுக்கு எந்த தேதியில் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. பாபுபாய்க்கு எந்த தேதியில் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுத்தார் என்றும் எனக்கு தெரியாது. வழக்கு சங்கதிகள் ஏதாவது தெரியுமா என்றால் பணம் கொடுத்தது மட்டும் தெரியும். பாபுபாய் 5–6 வருடங்களுக்கு முன்பாக விசாலாட்சிக்கு பணம் கொடுத்தார். பணம் கொடுத்ததற்கு என் முன்னிலையில் எதுவும் எழுதி வாங்கினார்களா என்றால் எழுதி வாங்கவில்லை. இது சம்மந்தமாக நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. இந்த வழக்கு சங்கதிகள் எதுவும் எனக்கு தெரியாமல் பிரதிவாதி கேட்டு கொண்டுள்ளதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** – இல்லை

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.